செ.வெ.எண். 27 நாள். 09.08.2017.

திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவர் திரு.பி.எம்.நரசிம்மன் அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டத்தில் 138 பயனாளிகளுக்கு ரூ.1.33 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

---------------

திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் கலைவாணர் கலையரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக் குழு ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவர் திரு.பி.எம்.நரசிம்மன் அவர்கள் தலைமையில் இன்று (09.08.2017) நடைபெற்றது. இக்கூட்டத்தில் குழு உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.ஆர்.ராஜா, திரு.எஸ்.சுதர்சனம், திரு எஸ் செல்வமோகன்தாஸ் பாண்டியன், டாக்டர் வி.பி.பி.பரமசிவம், திரு கே.பி.பி.பாஸ்கர், திருமதி மனோன்மணி, திருமதி சி ஜெயந்தி பத்மநாபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் 138 பயனாளிகளுக்கு ரூ1.33 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற பேரவை மதிப்பீட்டுக் குழுத் தலைவர் திரு.பி.எம்.நரசிம்மன் அவர்கள் வழங்கினார்கள். பின்னர் அவர்கள் பேசியதாவது:–

தமிழ்நாடு சட்டப் பேரவை மதிப்பீட்டுக் குழு அரசின் திட்டங்கள் முழுமையாக அனைத்து தரப்பு மக்களுக்கும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு முழுமையாக சென்று சேர்ந்துள்ளதா என்பதை ஆய்வு செய்திட அமைக்கப்பட்டுள்ளது. சட்டப்பேரவை உறுப்பினர்களைக் கொண்டு பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள போதும் மதிப்பீட்டுக்குழு என்பது முக்கியமான ஒன்றாகும். அனைத்து திட்டங்களையும் செயல்படுத்தப்பட்டுள்ளதை ஆய்வு செய்து மதிப்பீடு செய்திடும் தலையாய பணியினை ஆற்றிவருகிறது.

இன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பள்ளிக்கல்வித் துறை, சமூகநலத்துறை உட்பட பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் கூடுதலாக செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

முன்னதாக குழு திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் விரைவாகவும், தரமாகவும் செய்து முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அலுவலர்கள் அரசின் திட்டங்கள் முழுமையாக கீழ்நிலையில் உள்ள அடித்தட்டு மக்களுக்கும் சிறப்பாக சென்று சேர்க்கும் வகையில் சிறப்பாக பணியாற்றிட வேண்டும் எனப் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:–

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழக அரசின் அனைத்து திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை எளிய அடித்தட்டு மக்களுக்கும், அரசின் திட்டங்கள் முழுமையாக சென்றடையும் வகையில் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. நடைபெறும் சட்டமன்ற மதிப்பீட்டுக்குழு ஆய்வுக்கூட்டத்தில் வருவாய் துறையின் மூலம் இலவச வீட்டுமனை பட்டா 23 பயனாளிகளுக்கு ரூ.6.86 இலட்சம் மதிப்பிலும், ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் இலவச வீட்டுமனைப்பட்டா 14 பயனாளிகளுக்கு ரூ.16.80 இலட்சம் மதிப்பிலும், சமூகபாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நலத்திட்ட உதவிகள் 41 பயனாளிகளுக்கு ரூ.1.70 இலட்சம் மதிப்பிலும், மகளிர் திட்டத்தின் மூலம் 15 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.49.05 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளும், தாட்கோ மூலம் 4 பயனாளிகளுக்கு ரூ.22.00 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகளும் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் 2 பயனாளிகளுக்கு ரூ.9.28 இலட்சம் மதிப்பிலான 4 சக்கர வாகனம் வாங்குவதற்கான கடனுதவியும், புதுவாழ்வு திட்டத்தின்கீழ் 39 பயனாளிகளுக்கு ரூ.27.45 இலட்சம் மதிப்பிலான கடனுதவியும் மொத்தம் 138 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 33 இலட்சத்து 13 ஆயிரத்து 823 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது என தெரிவித்தார்.

ஆய்வுக்கூட்டத்தில் தலைமைச் செயலக செயலர் (பொ) திரு க.பூபதி, துணைச்செயலாளர்கள் திரு க.லோ. சிவகுமரன், திரு பாலகிருஷ்ணன், மாவட்ட வருவாய் அலுவலர், திரு முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு விஷ்ணு இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு பழனி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு இளம் பகவத், பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் திரு மாஹின் அபுபக்கர் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

<u>வெளியீடு</u>

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி